எரேமியாஸ் ஆகமம் 32:27

நாளாகமம் 1 29:11

ஆண்டவரே! மகத்துவமும், வல்லமையும், மகிமையும், செயமும் தேவரீருடையது. உமக்கே தோத்திரம். பரலோகத்திலும் பூலோகத்திலும் இருக்கின்ற அனைத்தும் உம்முடைய தாமே. அரசாட்சி, கர்த்தரே, உம் முடையது. தேவரீர் எல்லோருக்கும் ஆண்டவராக உயர்ந்திருக்கிறீர்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 1:37

ஏனெனில் சர்வேசுரனால் கூடாத வாக்கு ஒன்றுமில்லை என்றார்.

சங்கீதங்கள் 80:19

சங்கீதங்கள் 91:1-2

ஆண்டவரைத் துதிப்பதும், உந்நதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும், பத்து நரம்பு வீணையிலும், சுரமண்டலத்திலும், கீதத்தோடு யாழிலும் காலையிலே உமது கிருபை யையும், மாலையிலே உமது உண்மை யையும் அறிவிப்பதும் நேர்த்தியா யிருக்கின்றது.

காட்சியாகமம் 1:8

நானே அல்பாவும், ஓமேகாவும், ஆதியும் அந்தமும் என்று ஆண்டவராகிய கடவுள் சொல்லுகிறார். இவரே இருக்கிறவர், இருந்தவர், இனி வரப்போகிறவர், சர்வ வல்லபமுள்ளவர். (இசை. 41:4; 44:6; காட்சி. 21:6; 22:13.) ழுழுழு 8. இந்த ஆகமம் அர்ச். அருளப்பரால் எழுதப்பட்ட கிரேக்க பாஷையில் அல்பா என்பது முதல் எழுத்தும், ஓமேகா என்பது கடைசி எழுத்துமாயிருக்கின்றது. ஆகையால் சர்வேசுரன் நாமே, அல்பா ஓமேகா என்று சொல்லும்போது எல்லாத்துக்கும் ஆதிகாரணமும் முடிவும் கதியும் நாமே என்று சொல்லுகிறாரென்று அறியவும்.

சங்கீதங்கள் 145:3

அவர்களுடைய ஆவி பிரியவே, அவர்கள் தாங்கள் உருவான மண் ணுக்குத் திரும்புவார்கள்; அந்நாளிலே அவர்களுடைய எண்ணங்கள் யாவும் அழிந்துபோம்.

எரேமியாஸ் ஆகமம் 32:17

ஐயையோ! ஐயோ! ஆண்ட வரே, தேவனே! உமது பராக்கிரமத் தினாலும் புஷஜ பலத்தினாலும் வானத் தையும் பூமியையும் படைத்தீர்; உம்மாலாகாதது ஏதுமில்லை.

உரோமாபுரியார் 1 1:20

எவ்வாறெனில், கண்ணுக்கெட்டாத அவருடைய இலட்சணங்கள் உலகமுண்டானதுமுதல் சிருஷ்டிக்கப் பட்ட பொருட்களாலே புத்திக்கெட் டும்படியாகி, அவருடைய நித்திய வல்லமையையும், தெய்வீகத்தையுங் கூட விளங்கப்பண்ணுவதால் அவர் கள் போக்குச்சொல்வதற்கு இடமே யில்லை

சங்கீதங்கள் 24:1

ஆண்டவரே! உம்மை நோக்கி என் ஆத்துமாவை உயரத் திருப்பி னேன்.

நாளாகமம் 1 29:12

ஐசுவரியமும் உம்முடையது, மகிமையும் தேவரீருடையது. தேவ ரீர் சகலத்தையும் ஆளுகிறீர். உமது கரத்தில் பலமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத் தவும், எவருக்கும் அரசாட்சி கொடுக் கவும் உம்முடைய கரத்தினாலாகும்.

உரோமாபுரியார் 1 8:38-39

ஏனெனில் சாவானாலும், ஷஜீவ னானாலும், தேவதூதரானாலும், சத்து வகரானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், பராக்கிரமமானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய ஆண்டவராகிய சேசுக் கிறீஸ்துநாதர்மேல் நமக்குள்ள தேவ சிநேகத்தைவிட்டு நம்மை விலக்க முடியாதென்று எனக்கு நிச்சயமா யிருக்கிறது.

எபேசியர் 6:10

கடைசியாய், சகோதரரே, கர்த்தரிடத்திலும், அவருடைய சர்வ வல்லப சக்தியிலும் திடங்கொள்ளுங்கள்.

அருளப்பர் முதல் நிருபம் 4:4

பிள்ளைகளே, நீங்கள் சர்வேசுரனால் உண்டாயிருக்கிறீர்கள். உங்களுக் குள் இருக்கிறவர் உலகத்திலிருக்கிறவ னைவிடப் பெரியவராய் இருக்கிறபடி யால், நீங்கள் அவனை ஜெயித்தீர்கள்.

### தானியேல் ஆகமம் 2:22

அவரே ஆழமும் மறைபொரு ளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளிலுள்ளவைகளை அறிகிறவர், ஒளி அவரோடுளது (1கொரி.4:5; 1அரு.1:6; அரு.8:12).

### அரசராகமம் 1 2:7

ஆண்டவர் தரித்திரனாயாக்கு கிறார்; மகராசனாயுமாக்குகிறார்; தாழ்த்துகிறார்; மறுபடி உயர்த்துகிறார்.

### எசேக்கியேல் ஆகமம் 34:26

நாம் அவர்களை நமது குன்றின் சுற்றுப்புறத்தில் ஸ்தாபித்து ஆசீர் வதிப்போம்; தகுந்த காலத்திலே மழையைப் பெய்விப்போம்; அம்மழை களோ அவர்களுக்கு மிகவும் அதிர்ஷ்டமானவைகளாயிருக்கும்.

### அர்ச். மாற்கு சுவிசேஷம் 14:36

அப்பா, பிதாவே! உம்மால் எல்லாங் கூடும். இந்தப் பாத்திரத்தை என்னிடத்தினின்று அகற்றியருளும்; ஆயினும் என் மனதின்படியல்ல, உம் முடைய மனதின்படியே ஆகட்டும் என்றார்.